| DEPOSITION OF WITNESS<br>(Chapter XXIII code of Criminal Procedure)<br>IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MANAPPARAI<br>Present : Thiru.R.Ashokumar, B.com.,B.L.<br>Judicial Magistrate, Manapparai | |
|---|---|
| Date: 29.10.2025 | |
| CC.No.5/2025 | |
| சாட்சி : PW1 | |
| பெயர் : திரு. வெள்ளைக்கன்னு | ஜாதி : |
| த/பெ/க/பெ. : திரு. ஆறுமுகம் | தொழில் : விவசாயம் |
| கிராமம் : கோட்டை பளுவஞ்சி | சமயம் : |
| தாலுக்கா : | வயது : 50/2025 |
| ( எதிரி, வழக்கறிஞர் ஆஜர் ) | |

-----------------------------------------------------------

**அரசு தரப்பு முதல் விசாரணை**

1. நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். கடந்த 19.11.2023 அன்று காலை 06.30 மணியளவில் நானும், எனது அம்மா மூக்காயி அழைத்துக்கொண்டு திருச்சி – மதுரை சர்வீஸ் ரோட்டில் வளநாடு, கைக்காட்டியில் மாதா ஸ்கூல் அருகே உள்ள மரக்கடையில் வடபுறம் இருந்து தென்புறமாக இடது ஓரமாக நடந்து சென்றுகொண்டிருந்தோம். நான் இடது பக்கமாகவும், எனது அம்மா வலதுபக்கமாகவும் ஓரமாக நடந்து சென்றுகொண்டிருந்தோம். அந்த சமயத்தில் திருச்சியிலிருந்து தெற்கே இருந்து யமஹா ஆர்.15 TN 81 V 5721 என்ற வாகனம் அதிகேவமாகவும், கவனக்குறைவாகவும், அஜாக்கிரதையாகவும் வந்து எனது அம்மா மீது மோதியதில் அவர் தூக்கிவிசப்பட்டார். அவருக்கு இடது கையிலும், வலது கால், தலையில் பலத்த காயம் ஏற்பட்டது. ஆஜர் எதிரிதான் விபத்து ஏற்படுத்திய நபர் ஆவார். பின்னர் எனது அம்மாவை தனியார் கார் மூலம் மணப்பாறை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு வந்து சேர்ந்தேன். அங்கு பார்க்க முடியாது என்று சொன்னதால் 108 ஆம்புலன்ஸ் மூலம் திருச்சி அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்து சேர்த்தேன். அங்கு என்னை போலீசார் விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்றார்கள். **நான் கொடுத்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 21.11.2023 அன்று திருச்சி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த போது எனது அம்மா இறந்துவிட்டார். வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

2. நான் என்ன படித்துள்ளேன் என்றால் 10 ம்வகுப்பு வரை படித்துள்ளேன். விபத்து நடந்த அன்று புகாரை நான் தான் எழுதி கொடுத்தேன் என்றால் ஆமாம். நான் கொடுத்த புகாரில் திருச்சி – மதுரை ரோட்டில், தேசிய நெடுஞ்சாலையில் விபத்து ஏற்பட்டது என்றும் அந்த நேரத்தில் பின்புறமாக மதுரை நோக்கி திருச்சியிலிருந்த வந்த எதிரியின் இருசக்கரவாகனம் எனது தாயார் மீது மோதியது என்று புகாரில் நான் எழுதி கொடுத்தேன் என்றால் ஆமாம். எனக்கு திசைகள் தெரியும். திருச்சி – மதுரை தேசிய நெடுஞ்சாலை சம்பவ இடத்தில் தெற்கு – வடக்கு சாலையாக செல்கிறது என்றால் சரிதான். சம்பவ இடத்தில் பாலம் உள்ளது என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு பெயர் கைகாட்டி என்றும் அழைக்கப்படும். பாலத்தின் எந்த பகுதியில் சம்பவம் என்றால் வடக்கு பகுதியில் சம்பவம். தார் ரோட்டின் இருபுறமும் பாலத்தை ஒட்டி வீடுகள், கடைகள் உள்ளது என்றால் சரிதான்.

3. விபத்து நடக்கும் போது எங்கியிருந்து எங்கு சென்றுகொண்டிருந்தோம் என்றால் நானும், எனது அம்மாவும் கல்லாமேடு என்ற ஊரிலிருந்து எனது தாயாரை பஸ் ஏற்றிவிடுவதற்காக நடந்து வந்தோம். சம்பவ இடத்தில் அனுகு சாலை கடந்து பாலத்தில் ஏறம்போது இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் அனுகு சாலையில் வரும்போது இந்த சம்பவம் நடைபெற்றது. சம்பவ இடத்தில் தார் ரோட்டை கடக்க வேண்டும் என்றால் அனுகு சாலையின் இருபுறமும் முடிந்த பின்பு அதற்கான பிரிவு ரோட்டில் செல்ல வேண்டும் அல்லது பாலத்தின் அடியில் உள்ள சாலையில் செல்லவேண்டும் என்றால் சரிதான். நான் கொடுத்த புகாரில் எதிரி வாகனத்தின் எந்த பகுதி மோதியது என்று எழுதி கொடுத்தேனா என்றால் பின்பகுதி மோதியது என்று எழுதிகொடுத்தேன்.

4. சம்பவ நடந்தது தார் ரோட்டின் கிழக்கு பகுதி என்றால் சரிதான். சம்பவ இடத்திலிருந்து கிழக்கு பகுதி தார் ரோடு எவ்வளவு துாரம் இருக்கும் என்றால் கிழக்கு பகுதி தார் ரோட்டை ஒட்டி நாங்கள் சென்றோம். தார் ரோடும், மண்ரோடும் ஒட்டியுள்ள பகுதியாகும். விபத்து நடந்தவுடன் எத்தனை நபர்கள் விபத்தை பார்த்தார்கள் என்றால் சுமார் 7, 8 நபர்கள் பார்த்திருப்பார்கள். நான் கொடுத்த புகாரில் சம்பவம் பற்றி யார் யாருக்கு தெரியும் என புகாரில் சாட்சிகள் பெயரை எழுதிகொடுத்தேன் என்றால் ஆமாம். எனது அம்மாவிற்கு என்ன வயது இருக்கும் என்றால் சுமார் 65 வயது இருக்கும். காது கேட்கும் திறனும், பார்வை திறன் நன்றாக இருக்குமா என்றால் இருக்கும்.

5. Ex.P1 ல் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். எனது கையெழுத்திற்கு மேலே இடைவெளி 5 வரிக்கும் எழுதும் அளவிற்கு உள்ளது என்றால் சரிதான். எனது கையெழுத்திற்கும் கீழும், புகாரிலும் தேதி ஏதும் குறிப்பிடபவில்லை என்றால் சரிதான். புகாரை எங்கு கொடுத்தேன் என்றால்

திருச்சி அரசு மருத்துவமனையில் இருந்த போது என்னிடம் போலீசார் எழுதி வாங்கி கொண்டார்கள். Ex.P1 ல் என்னிடம் எழுதாத வெள்ளை பேப்பரில் கையெழுத்து மட்டும் பெற்றுக்கொண்டு போலீசார் சம்பவ இடம், வண்டி எண், சம்பவம் நடந்த விதம் ஆகியவைகளை நானே எழுதிகொள்கிறேன் என்று சொல்லி கையெழுத்து மட்டும் என்னிடம் பெற்று வந்தார்கள் என்றால் சரிதான். இந்த விபத்து சம்மந்தமாக நஷ்ட ஈடு கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இந்த சம்பவமே நானும், எனது அம்மாவும் தார் ரோட்டை மேற்கு பகுதியிலிருந்து தேசியநெடுஞ்சாலையில் எவ்வித சைகையும் காட்டாமல் தீடீரென கடக்க முற்பட்டதால் இந்த விபத்து ஏற்பட்டது என்றும் நான் அதை மறைத்து விபத்து நஷ்ட ஈடு பெறவேண்டும் என்பதற்காக சம்பவ இடத்தையும், விபத்தின் தன்மையை மாற்றி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் எழுதி கொடுத்த புகாரில் சம்பவ இடத்தில் தேசியநெடுஞ்சாலையில் ஒரு பாலம் உள்ளது என்றும், அந்த பாலத்தின் வடக்கு பகுதியில் அனுகு சாலை ஓட்டிதான் சம்பவம் என்று எழுதிகொடுத்தேன் என்றால் சரிதான். விபத்து நடந்தவுடன் நான் தாயாரை அழைத்து சென்றதால் சம்பவ இடத்திற்கு போலீசார் வந்த விபரம் எனக்கு தெரியாது. நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken over by me in open court read over
to the witness and admitted by the witness
to be correct.

Sd/–R.Ashokumar,B.com.,B.L.,
Judicial Magistrate,
Manapparai.

| DEPOSITION OF WITNESS<br>(Chapter XXIII code of Criminal Procedure)<br>IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MANAPPARAI<br>Present : Thiru.R.Ashokumar, B.com.,B.L.<br>Judicial Magistrate, Manapparai | |
|---|---|
| Date: 29.10.2025 | |
| CC.No.5/2025 | |
| சாட்சி : PW2 | |
| பெயர் : திருமதி. ஹேமலதா | ஜாதி : |
| த/பெ/க/பெ. : திரு. வெள்ளைக்கன்னு | தொழில் : விவசாயம் |
| கிராமம் : கோட்டை பளுவஞ்சி | சமயம் : |
| தாலுக்கா : | வயது : 40/2025 |
| ( எதிரி, வழக்கறிஞர் ஆஜர் ) | |

---

**அரசு தரப்பு முதல் விசாரணை**

1. நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். அ.சா.1 எனது கணவர். இந்த வழக்கு விபத்தில் இறந்தவர் எனது மாமியார். கடந்த 19.11.2023 அன்று வளநாடு கைக்காட்டியில் எனது மாமியார் விபத்து ஏற்பட்டதாக எனது கணவர் தகவல் சொன்னார். நான் சம்பவ இடத்தில் சென்று பார்த்த போது எனது மாமியார் இரத்த வெள்ளத்தில் கிடந்தார். இருசக்கரவாகனம் மோதி விபத்து ஏற்பட்டதாக எனது கணவர் சொன்னார். மணப்பாறை அரசு மருத்துவமனையில் முதல் சிகிச்சை எடுத்து மேல் சிகிச்சைக்காக திருச்சி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். அங்கு சிகிச்சையில் இருக்கும் போது எனது மாமியார் இறந்துவிட்டார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

2. சம்பவம் நடந்த இடம் கைக்காட்டி என்றால் ஆமாம். சம்பவ இடம் பாலத்தின் தெற்கு பகுதியாகும். சம்பவ இடத்தில் திருச்சி – மதுரை தேசிய நெடுஞ்சாலையில் கைக்காட்டியில் ஒரு பாலம் உள்ளது. அந்த பாலத்தின் மேற்கு பகுதியிலும், கிழக்கு பகுதியிலும் தார் ரோட்டில் அனுகு சாலை உள்ளது என்றால் சரிதான். அந்த பாலத்தின் கீழ்பகுதியில் தார் ரோட்டை கடப்பதற்கு வழியுள்ளது என்றால் சரிதான். சம்பவ இடத்தில் தார் ரோட்டின் இருபுறமும்

கடைகள், வீடுகள் உள்ளது என்றால் சம்பவ இடத்தில் இல்லை, சற்று தூரத்தில் தென்திசையில் உள்ளது. சம்பவ இடத்தில் எனது மாமியார் இறந்து கிடந்ததை பார்த்தேன், அங்கு இருசக்கரவாகனத்தை நான் கவனிக்கவில்லை. சம்பவம் நடந்த இடம் கிழக்கு பகுதி தார் ரோட்டின் மத்தியபகுதியாகும்.

Taken over by me in open court read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-R.Ashokumar,B.com.,B.L.,
Judicial Magistrate,
Manapparai.